Reproduced from *Nagapattinam to Suvarnadwipa: Reflections on the Chola Naval Expeditions to Southeast Asia (Tamil Edition)* edited by Herman Kulke, K. Kesavapany and Vijay Sakhuja (Singapore: Institute of Southeast Asian Studies, 2011). This version was obtained electronically direct from the publisher on condition that copyright is not infringed. No part of this publication may be reproduced without the prior permission of the Institute of Southeast Asian Studies. Individual articles are available at < http://bookshop.iseas.edu.sg >

# பிற்சேர்க்கை 1

# தமிழிலும் வடமொழியிலும் எழுதப்பட்ட தென்கிழக்காசியா, சீனா தொடர்பிலான பழங்கால - மத்தியகால கல்வெட்டுகள்

நோபுரு கராஷிமா, Y. சுப்பராயுலு

## அறிமுகம்

பண்டைய, மத்திய காலக்கட்டங்களில் தென்கிழக்காசியா மற்றும் சீனா குறித்துத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்ட 16 கல்வெட்டுகளை இப்பகுதியில் நாம் பார்க்கப் போகிறோம். அந்த 16 கல்வெட்டுகளில் 7 தென்கிழக்காசிய நாடுகளிலும் சீனாவிலும் கண்டுபிடிக்கப்பட்டவை. எஞ்சிய 9ம் தென்னிந்தியாவைச் சேர்ந்தவை. சம்பசாக் (Champassak) கல்வெட்டைத் தவிர, தென்கிழக்காசியாவிலும் சீனாவிலும் வாசகங்களையும் அவற்றின் தமிழ் விளக்கங்களையும் இங்குத் தந்திருக்கிறோம். தென்னிந்தியாவையும் சம்பசாக்கையும் சேர்ந்த கல்வெட்டுகளின் முக்கியப் பகுதிகளையும் வழங்கியுள்ளோம். அந்தக் கல்வெட்டுகளில் காணப்படும் வாசகங்கள் நீளமானவை. ஆனால் தென்கிழக்காசியாவைப் பற்றிக் குறைவான விவரங்களே அவற்றில் இடம்பெற்றுள்ளன.

அந்த 16 கல்வெட்டுகளும் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1 முதல் 9 வரையிலான கல்வெட்டுகள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவை. அவற்றில் கடாரம்(ஸ்ரீவிஜயா) அல்லது காம்போஜம் (கம்போடியா) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. 10 முதல் 16 வரையிலான கல்வெட்டுகள் தென்கிழக்காசியா மற்றும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டவை. ஒவ்வொரு தொகுதியிலும் கால முறைப்படி கல்வெட்டுகள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவைத் தமிழில் உள்ளன. இரண்டு தாமரப் பட்டயங்கள் (copper plates nos. 1 & 3) தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உள்ளன. சம்பசாக் கல்வெட்டு (no. 9) முழுவதும் சமஸ்கிருதத்தில் உள்ளது.

நாகப்பட்டினக் கல்வெட்டு (nos. 2 - 4), திருக்கடையூர் கல்வெட்டு (no. 9) நீசூ ஆச்சே (Neusu Aceh) கல்வெட்டு (no. 16) ஆகிவற்றைத் தவிர மற்ற கல்வெட்டுகளின் விவரங்கள் ஏற்கனவே சில ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் வரலாற்று ஏடுகளில் இடம்பெற்றுள்ளன. அவை குறித்த விவரங்கள் தேவை ஏற்பட்ட இடங்களிலும் வாசகங்களிலும் தரப்பட்டுள்ளன. இருப்பினும் மொழிப் பெயர்ப்புகளிலும் ஆங்காங்கே மாற்றங்கள் செய்துள்ளோம். மேற்கூறப்பட்ட நாகப்பட்டினக் கல்வெட்டு, திருக்கடையூர் கல்வெட்டு, நீசூ ஆச்சே கல்வெட்டு ஆகியவற்றின் வாசகங்கள் இங்கு முதல் முறையாக வெளியிடப்படுகின்றன.

முதலாம் இராஜேந்திர சோழன் கடாரத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஆண்டு பற்றிக் கருத்து வேறுபாடுகள்[1] இருந்தபோதிலும், அதை கி.பி. 1026-ஆம் ஆண்டு என்று ஏற்கலாம். ஆட்சியேற்ற 13-ஆம் ஆண்டில் அவன் சென்றான் என்று சில கல்வெட்டுகள் கூறுவது சர்ச்சைக்கு உரியது. அவன் ஆட்சியேற்ற 14-ஆம் ஆண்டின் 70-வது நாள் வரை, கடாரத்துக்கு முந்தியப் பயணங்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே உள்ளன (South Indian Inscriptions, V, No. 651).

## முதலாம் இராஜராஜ சோழனின் பெரிய லெய்டன் (Larger Leiden) தாமரப் பட்டயம்.

*(Found in Anaimanglam, South India) Epigraphia Indica, Vol XXII, No. 34*

இது கடாரத்து மன்னன் புத்த ஆலயத்தைக் கட்டியது பற்றியும் இராஜராஜ சோழன் அதற்காக கிராமம் ஒன்றை எழுதி வைத்ததையும் பற்றியது. இராஜராஜன் ஆட்சியேற்ற 21-வது ஆண்டில் (கி.பி. 1006) அது எழுதப்பட்டது. அதில் இடம்பெற்றுள்ள இராஜராஜன் குறித்த மெய்கீர்த்தி (prasasti) அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழனால் கி.பி. 1019-ஆம் ஆண்டு வாக்கில் சேர்க்கப்பட்டது. (வரிகள் 2 – 4 வரை பார்க்கவும்).

**சமஸ்கிருத பகுதி**
[வரிகள் 73 முதல் 86 வரை]

sō=yam=akhila-kalā-kala¯pa-pārāva¯ra-pāra¯driśv=āśēsha-nripa-cakra-cāru-cāmīkara-kirı¯ta-kōti-
ghat.it-ānēka-mānikya-marīci-puñcarı¯krita-pāda-pīthō rājarājō rājakēcarivarmmā
sva-sāmrājya-varshē ēkavimśatitamē nikhila-dharani-tilakāyamānē
kshatriya-śikhāmani-valanātu-nāmni mahati janapada-nivahē patt.ana-kkūṟr-a-nāmni
janapadē=nēka-sura-sadana-satra-prap-ārām-ābhirāmē vividha-savudha rāji-rājamānē
nāgīpattanē nija-mati-vibhava-vijita-suragurunā
budha-jana-kamala-vana-marīcimālin=ārtthi-jana-kalpapādapēna
śailēndra-vamśa-sambhūtēna śrīvishay-ādhipatinā Katāha-ādhipatyam=ā tanvatā
makara-ddhvajēn=ādhigata-sakala-rājavidyasya cūlāmanivarmmanah putrēna
śrī-māra-vijayōttumgavarmmanā sva-pitur=nnāmnā
nirmmāpitam=adharīkrita-kanakagirı¯-samunnati-vibhavam=atiramanīyañ=cūlāmanivarmma-v
ihāramadhivasatē buddhāya tasminn=ēva janapada-nivahē patt.ana-kkūṟr-a-nāmni janapadē
karinī-parikramana-vispashta-sīmā-catushtayam=ānaimaṅgal-ābhidhānam grāmam=adāt.
itthan=dēvēna dattasya sva-pitrā cakravarttinā grāmasy=āsya gatē
tasmin=dēvabhūyam=mahaujasi [v.35] tat-simāhsanam=ārūdhas=tat-putrō madhurāntakah
śāsanam śāsvatan=dhīmān kārayitv=ādiśa[n*]=nripah [v.36] śēshō=śēshām=mahīm
yāvad=dhattē=śēsh-ōrag-ēśvarah sthēyāt=tāvan=vihārō=yam vibhavēna sah=āvanau [v.37]
sō=yam katāh-ādhipatir=ggunānān=nivāsa-bhūmir=mmahita-prabhāvah āgāminah
prārtthayatē narēndrān dharmmam sad=ēmam=mama rakshat=ēti [v.38]

## தமிழ் மொழிப்பெயர்ப்பு
[வரிகள் 73 முதல் 86 வரை]

பல நூல்களாகிய கடலின் கரைகண்டவனும் அரசர்களின் மணிமுடிகளிலிருந்து வீசும் ஒளியினாலேயே பொன்போல் விளங்கும் கால்மணை உடையவனும் ஆன இந்த அரசன் ராஜகேசரிவர்மன் ராஜராஜன், தனது 21ஆவது ஆட்சி ஆண்டில் இதனை வழங்கினான். தன்னுடைய அறிவின் மேன்மையினாலேயே தேவகுருவை வென்றவனும் கற்றறிந்தார் என்னும் தாமரைக் காட்டிற்கு ஒரு சூரியன் போன்றவனும் இரவலர்களுக்குக் கற்பகமரம் போன்றவனும் சைலேந்திர குலத்தில் பிறந்தவனும் ஸ்ரீவிஜயநாட்டின் மகரமுத்திரை உடையவனும், அரசதந்திரம் எல்லாம் அறிந்த சூளாமணிவர்மனின் குமாரனும் ஆன, புகழ்பெற்ற மாற விஜயயோத்துங்க வர்மன் என்னும் அரசன் கோயில்களாலும் சத்திரங்களாலும் தண்ணீர்ப் பந்தல்களாலும் பூங்காவனங்களினாலும் மாளிகைகளினாலும் மகிழ்ச்சிக்குரியதாக விளங்கும் க்ஷத்திரியசிகாமணி வளநாட்டில், பட்டினக்கூற்றத்தில் உள்ள, உலகத்துக்குத் திலகம் போன்ற நாகப்பட்டினத்திலே, தன் உயரத்தினாலே வியப்படையச் செய்கிற சூடாமணி விகாரை, தன் தகப்பனார் பெயரால் அமைந்த, புத்தர் பெருமான் கோயிலுக்கு, [ராஜராஜன்] வழங்கினான். மேற்கூறிய நாட்டில் பட்டினக் கூற்றத்தில் பிடிசூழ்ந்து பிடாகை நடத்தி எல்லை அமைத்து ஆனைமங்கலம் என்னும் ஊரைத் தானமாக [ராஜராஜன்] வழங்கினான்.

## தமிழ்ப் பகுதி
[வரிகள் 1 முதல் 17 வரை]

ஸ்வஸ்தி ஸ்ரீ கோனேரின்மை கொண்டான் க்ஷத்ரிய
சிஹாமணி வளநாட்டுப்
பட்டினக் கூற்றத்து நாட்டார்க்கும் பிரமதேய கிழவர்க்கும்
தேவதானப் பள்ளிச் சந்தக்கணி முற்றூட்டு வெட்டப்
பெற்றூர்களிலார்க்கும் நகரங்களி லார்க்கும் நமக்கு யாண்டு
இருபத்தொன்றாவது நாள் தொண்ணூற்றிரண்டினால்
தஞ்சாவூர்ப் புரம்படி மாளிகை ராஜஸ்ரயனில் தெற்கில்
மண்டபத்து நாம் இருக்கக் கிடாரத்தரையன்
சூளாமணிமன்னன் க்ஷத்ரிய சிஹாமணிவளநாட்டுப் பட்டநக்
கூற்றத்து நாகப்பட்டினத்து எடுப்பிக்கின்ற சூளாமணிபன்ம
விஹாரத்துப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்கு க்ஷத்ரிய
சிஹாமணி வளநாட்டுப் பட்டநக் கூற்றத்து ஆனைமங்கலம்
பள்ளிச்சந்தம் இறங்கலுள்பட அளந்தபடி நீங்கல்நீங்கி
நிலன்தொண்ணூற்றேழே யிரண்டுமா முக்காணியரைக்காணி

முந்திரிக்கீழ் மூன்றுமா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே
யிரண்டுமாவினால் இறைகட்டின காணிக்கடன் நெல்லு
எண்ணாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது முக்கலனே
இருதூணிக் குறுணி ஒருநாழியும் கடாரத் தரையன் க்ஷத்திரிய
சிகாமணி வளநாட்டுப் பட்டனக் கூற்றத்து நாகப்பட்டனத்
தெடுப்பிக்கின்ற சூளாமணிபன்ம விஹாரத்துப் பள்ளிக்கு
இருப்பதாக யாண்டு இருபத்தொன்றாவது முதல் பள்ளிச் சந்த
இறையிலியாக வரயிலிட்டுக் குடுக்கவென்று நாம் சொல்ல.

**விளக்கம்**

மங்களம் உண்டாகட்டும். இது க்ஷத்ரியசிகாமணி வளநாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் பட்டனக் கூற்றத்தைச் சேர்ந்த நாட்டார்களுக்கும், பிரம்மதேயத் தலைவர்களுக்கும், தேவதான, பள்ளிச்சந்த, கணிமுற்றூட்டு, வெற்றப்பெற்றூர் ஆகிய கிராம மக்களுக்கும் நகரத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஒப்பில்லா அரசன் (கோனேரின்மை கொண்டான்) இடும் கட்டளை.

எனது 21-வது ஆட்சி ஆண்டின் 92-வது நாளன்று நான் தஞ்சாவூரின் புறநகர் பகுதியில் உள்ள ராஜஸ்ராயன் மாளிகையின் தெற்குப் பகுதி கூடத்தில் இருந்து, ஷத்ரியசிகாமணி வளநாட்டின் பகுதியான பட்டனக்கூற்றத்தில் உள்ள ஆனைமங்கலம் கிராமத்தை, நாகப்பட்டனம் பட்டனக்கூற்றம் ஷத்ரியவளநாட்டில் கடார மன்னன் சூடாமணிவர்மன் கட்டியுள்ள சூடாமணிவர்ம விஹாராவின் தேவைகளை ஈடு செய்வதற்காக எனது 21வது ஆட்சி ஆண்டிலிருந்து வரியில்லா பள்ளிச்சந்தமாக வழங்குகிறேன்.

அந்தக் கிராமத்தில் உள்ள கிட்டத்தட்ட 97 வேலி நிலத்தில் விளையக்கூடிய 8,943 கலம் நெல் மூலம் வரும் வருமானத்தை அந்தப் பள்ளிக்குத் தருமாறும், 21-வது ஆட்சி ஆண்டு முதல் அதை வரியில்லா பள்ளிச்சந்தமாக பதிவேட்டில் குறிக்குமாறும் பணிக்கிறேன்.

## நாகப்பட்டினக் கல்வெட்டு (1)

*(Found in Nagappattinam, South India) ARE 1956-57, No. 161.*

தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகணசுவாமி கோயிலில் (நீலாயதாட்சி அம்மன் கோயில்) இருக்கும் இந்தக் கல்வெட்டு கடார மன்னனின் முகவர், அக்கோயிலுக்கு அளித்த மானியத்தைப் பற்றிக் கூறுகிறது. அந்தக் கல்வெட்டு பெரிதும் சேதமடைந்துள்ளது. அது எழுதப்பட்ட காலம் கி.பி. 1014 அல்லது 1015.

**வாசகம்**

ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான ஸ்ரீராஜேந்திர
சோழர்க்கு யான்.. டு நாகபட்டினத்து திருக்காரோணமுடைய
மஹாதேவர் திருச்சுற்று மாளிகை வாசல் க்ஷத்ரியசிகாமணி
யி... கொண்ட செய்வித்தான் ஸ்ரீவிஷையத்தரையர் கன்மி
ஸ்ரீ மூலனகத்தீஸ்ரன் இத்தன்மம் சந்திராதித்தவற் நி...
இதினுக்கு... கல்வெட்டிக் குடுக்கவென்று இவ்வாண்டு
ஸ்ரீகாரியன் செய்கின்ற அளனாட்டு புத்தமங்கலமுடையான்
னக்கன் குமரன் செங்... தமு... பஞ்சாசாரியத் தேவ கன்மிகள்
சொல்லவும் இப்பரிசு கல்வட்டினென், இவ்வூர் தச்சன் ஏறன்
சடையனேன் தேவர் கண்ட ஆசாரியேன் எ...

**விளக்கம்**

(பகுதி 1, வரிகளட 1 – 6)
மங்களம் உண்டாகட்டும். ஸ்ரீ ராஜேந்திர சோழர் ஆட்சியேற்ற ...ஆண்டில் ஸ்ரீவிஷயம் மன்னரின் (ஸ்ரீ விஷையத்தரையர்) கன்மியான (முகவர்) ஸ்ரீ மூலன் அகத்தீஸ்வரன் என்பவர், நாகப்பட்டினத்தில் உள்ள திருக்கரோணமுடைய மகாதேவர் (கோயில்) வெளிச்சுவருக்கு நுழைவாயில் அமைக்க ஏற்பாடு செய்தார். அந்தத் தானம் சந்திரனும் சூரியனும் இருக்கும் வரை நிலைக்க வேண்டும். இவ்வாண்டுக்கான கோயிலின் ஸ்ரீ காரியம் செய்யும் ஆளநாட்டைச் சேர்ந்த புத்தமங்களமுடையான் நக்கன் குமாரன், கோயில் பஞ்சாயத்தார்கள், தேவகன்மிகள் உத்தரவின்படி இந்த ஊர் தச்சனான ஏறன் சடையன் என்ற தேவர்கண்ட ஆசாரியான நான், இந்தத் தானம் குறித்துக் கல்வெட்டில் எழுதுகிறேன். இது என் முத்திரை.

இப்பகுதியின் இதர வரிகளும், மற்ற பகுதிகளும் அதே முகவர் அளித்த வெள்ளிப் பாத்திரங்கள், வெண்கல விளக்குகள் போன்ற பரிசுப் பொருட்களைப் பட்டியலிடுவதால் அவற்றை இங்கு சேர்க்கவில்லை.

## நாகப்பட்டினக் கல்வெட்டு (2)

*(Found in Nagappattinam, South India) ARE 1956-57, No. 164*

தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகணசுவாமி கோயிலில் (நீலாயதாட்சி அம்மன் கோயில்) இருக்கும் இந்த கல்வெட்டு ஸ்ரீ விஜயா (கிடாரம்) மன்னனின் முகவர் ஒருவர் கோயிலுக்கு அளித்த மானியத்தைப் பற்றிக் கூறுகிறது. இராஜேந்திர சோழன் ஆட்சியேற்ற 3வது ஆண்டில் (கி.பி. 1015) இக்கல்வெட்டு எழுதப்பட்டது.

**வாசகம்**

ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மரானது ஸ்ரீ ராஜேந்திர
சோழதேவர்க்கு யாண்டு 3 ஆவது க்ஷத்ரியசிகாமணி
வளநாட்டு... பட்டினக்... ரோண... வெள்ளித்திருமேனி
நாகையழகற்கு ஸ்ரீ விஜயத்தரையர் கன்மி
ராஜராஜமண்டலத்து சீட்செம்பினாட்டு மேன்றோன்றி
பட்டினத்... ய்வித்த செஷ... ச... நிறை[பொ]ன் பதினால்க்
களஞ்சரை இதில் வீரபட்டத்துக் கட்டின சாதிமாணிக்கம்
பதினொன்று நடுவல் மகரத்து நடுவு கட்டின மரகத... ன
மாணிக்... [உபாய] டின மாணிக்கம் மூன்று இதின்மேல்வாய்க்
கட்டின பச்சை மகரத்தின் கீழ்வாய்க்... உ மாணிக்கம் அஞ்சு
இதில் கீழ்வாய்க் கட்டின சற்பமொத்தி வலபக்கத்[து
வட்டப்பூவில்] கட்டின மர... ஏழு இடப்பக்கத்து வட்டப்பூவில்
கட்டின மாணிக்கம் ஏழு பின்பில் பருத்தக்குறளில் கட்டின
மாணிக்கம் நாலு மகாமணியாகக் கட்டின மாணிக்கம் சாதி
மாக்கல்லு நாற்ப... வெற்றி... மாக நிறை ஆறு மாஞ்சாடி
கல்லுட்பட காசு நிரை பதினாற்காழஞ்செ முக்காலே ம்... சாடி
இப்பரிசு கல்வெட்டுக வென்று இவாண்டு ஸ்ரீ காரியஞ்
செய்கின்ற அருமொழி... நாட்டுக... ரத்து காண்டியூருடயார்
சேந்தன் ச... இத்தேவகன்மிகளும் சொல்லக் கல்வெட்டினேன்
நாகபட்டினத்து ஏறஞ்சடையான கண்டரா[சா]ரியனேன்.

**விளக்கம்**

(வரிகள் 1 – 2)

மங்களம் உண்டாகட்டும். கோப்பரகேசரிவர்மர் என்ற ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் ஆட்சியேற்ற 3வது ஆண்டில், நாகப்பட்டினம் ஷத்ரிய சிகாமணி வளநாட்டில் அலங்காரம் செய்வதற்காக, ஸ்ரீ விஜயா மன்னரின் (ஸ்ரீ விஜயத்தரையர்) கன்மியான ராஜராஜ மண்டலத்தில் உள்ள கீழ்செம்பி நாட்டின் மண்தோன்றிப் பட்டினத்தைச்[2] சேர்ந்த (பெயர் அழிந்துபோய் விட்டது) பதினான்கரை கலஞ்சு எடையுடைய மாணிக்கம், மரகதம் போன்ற ரத்னக் கற்களைத் தானமாக வழங்கினார்.

[நடுப்பகுதியான வரிகள் 2 – 6 விடப்பட்டுள்ளன]

(வரிகள் 6 – 8)

கோயில் ஸ்ரீ காரியமான (கோயில் விவகாரங்களுக்கான அதிகாரி) அருள்மொழி தேவவள நாட்டைச் சேர்ந்த காண்டியூருடயார் சேந்தன் மற்றும்

கோயில் தேவகன்மிகள் (நிர்வாகத்தினர்) உத்தரவுப்படி ஏறஞ்சடையன் என்ற நாகப்பட்டினத்து கண்டராச்சாரியனான நான் இந்தக் கல்வெட்டை எழுதுகிறேன்.

## நாகப்பட்டினக் கல்வெட்டு (3)

*(Found in Nagappattinam, South India) ARE 1956 – 57, No. 166.*

தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகணசுவாமி கோயிலில் (நீலாயதாட்சி அம்மன் கோயில்) உள்ள இந்தக் கல்வெட்டு ஸ்ரீ விஜய மன்னனின் முகவர் ஒருவர், கோயிலுக்கு அளித்த மானியம் பற்றி குறிப்பிடுகிறது. முதலாம் இராஜேந்திர சோழன் ஆட்சியேற்ற 7-ஆம் ஆண்டில் (கி.பி. 1019) இது எழுதப்பட்டது.

**வாசகம்**

கோப்பரகேசரிபன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழதேவற்கு
யாண்டு 7 ஆவது சகூத்ரியசிகாமணி வளநாட்டு பட்டினக்
கூற்றத்து நாகபட்டினத்து திருக்காரோண... டைய
மஹாதேவர் கோயிலில் கிடாரத்தரையர் கன்மி ஸ்ரீ குருத்தன்
கேசுவன்நான அக்ரலேகை எழுந்தருளிவித்த
அர்த்தநாரிகளுக்கு அவிபலி அர்ச்சனைக்கு என்று
மேற்படியான் வரக்காட்டின சீனக்கனகம் எண்பத்தேழு
உத்தமாக்ரம் இரண்டு கலமுண்ண போகட்டுக்கு என்று
வரக்காட்டின சீனக்கனகம் எண்பத்தேழு களஞ்சே முக்காலும்
மேற்படியான் தேவர்க்கும் ப்ராமணர்க்கும்... தயிரு... என்று
வரக்காட்டின உண்டிகைப்போன் [அ]றுபதின் கலஞ்சே
முக்காலும் ஆக இப்பொன் இருநூற்று முப்பத்தாறு கலஞ்சே
காலும் திருக் காரோணமுடையார்க்கு வேண்டும்
திருவாபரணம் உள்ளிட்டன செய்யக் கொண்டு இத்தேவர்
பண்டாரத்தை...

**விளக்கம்**

[வரிகள் 1 – 6 இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்தி விடப்பட்டுள்ளது]

(வரிகள் 1 - 6)

கோப்பரகேசரிவர்மர் என்ற ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் ஆட்சியேற்ற 7வது ஆண்டில், கிடாரத்து மன்னரின் (ஸ்ரீ விஜயத்தரையர்) கன்மியான (முகவர்) அக்ரலேகை என்ற ஸ்ரீ குரத்தன் கேசுவன் நாகப்பட்டினம்

பட்டினக்கூற்றத்தில் உள்ள ஷத்ரியசிகாமணி வளநாட்டில் இருக்கும் திரு காயாரோணமுடைய மகாதேவர் கோயிலில் அமைத்த அர்த்தனாரிகள் விக்கிரகத்துக்கு ஆவிபலி (உணவு) படைப்பதற்காக, 87¾ களாஞ்சு சீனக் கனகத்தை (தங்கம்) அனுப்பினான். கோயிலில் உள்ள இருவருக்கு நல்ல உணவு படைக்க மேலும் 87¾ களஞ்சு சீனக் கனகத்தையும், பிராமணர்களுக்கும் விக்கிரகங்களுக்கும் உணவு படைக்க மேலும் 60¾ களஞ்சு முத்திரைத் தங்கத்தையும் அந்தக் கன்மி அளித்தான்.

[மீதமுள்ள வரிகள் (21 – 84) விடப்பட்டுள்ளன]

## முதலாம் ராஜேந்திரனின் கரந்தை தாமிரப் பட்டயம்
*(Found in Karandai, South India)*

K.G. Krishnan, Karandai Tamil Sangam Plates of Rajendrachola I, (Memoirs of Archeological Survey of India. No.79, New Delhi, 1984.) இது காம்போஜ (கம்போடியா) அரசன் ஒருவன், முதலாம் இராஜேந்திரனுக்குத் தேர் ஒன்றை பரிசளித்ததைக் குறிக்கிறது. இராஜேந்திர சோழன் ஆட்சியேற்ற 8வது ஆண்டில் (கி.பி. 1020) இந்தப் பட்டயம் எழுதப்பட்டது.

[வரி 48]

காம்போஜ ராஜோ ரிபுராஜ சேனா ஜைத்ரேனா யென்
அஜாயத் ஆஹவேஷு தம் பிரஹிநோத் பிரார்த்திட்ட மித்ர
பவோ யஸ்மை ரதம் ரத்ஷிடும் ஆத்ம லஷ்மிம்

**தமிழ் மொழியெர்ப்பு**

இராஜேந்திரனின் நட்பை வேண்டிய காம்போஜ அரசன், தமது செல்வங்களைக் கட்டிக் காத்துக்கொள்ள, பல்வேறு போர்களில் சண்டையிட்டுப் பல்வேறு படைகளை வீழ்த்த பயன்படுத்தப்பட்ட வெற்றித் தேரை (ரதம்) அவனுக்கு அனுப்பி வைத்தான்

## முதலாம் இராஜேந்திர சோழனின் திருக்கடையூர் கல்வெட்டு
*(Found in Tirukkadaiyur, South India)*

பழைய தஞ்சாவூர் மாவட்டம் அமிர்தகடேஸ்வரர் கோயில் உள்ள மூலஸ்தானத்தில் உள்ள பீடத்தின் வடக்குப் பகுதியில் இந்தக் கல்வெட்டு காணப்படுகிறது. முதலாம் ராஜேந்திரன், கடாரத்தைப் பிடிக்கச் சோழர்

படையை அனுப்பியதை அது வருணிக்கிறது. ராஜேந்திர சோழன் ஆட்சியேற்ற 15-ஆம் ஆண்டில் (கி.பி. 1027) அந்தக் கல்வெட்டு எழுதப்பட்டது.

**வாசகம்**

[வரிகள் 4 முதல் 5 வரை]

அலைகடல் நடுவும் பலகலஞ்செலுத்திய
சங்கிராம்மவிசையதுங்கபன்மன்நாகிய கடாரத்தரசனை[3]
வாகையம் பொருகடல் கும்பகரியொடும் அகப்படத்துரிமையில்
பிறக்கிய பெருநெதி பிறக்கமும் ஆந்தவன நகர் பொர்த்தொழிற்
வாசலில் விஜந்திர தோராணமும் மொய்ததோழிர்
பன்மணிப்புதவமும் கனமணிக்கதவமும் நிறை ஸ்ரீ விஜையமும்
துறைநீர் பண்ணையும் பன்மலையூரெயி ரொன்மலையூரும்
ஆல்கடல்சூழ் மாயூரிதிங்கமும் கலங்காவல்வினை
இலங்காசோகமும்[4] காப்புறு நிறைபுனல் மாப்பபாலமும் காவலம்
புரிசெய் மாவிலிம்பங்கமும் விளைப்பனூறுடை வளைப்பந்தூறும்
கலைத்தங்கொர் புகழ் தலைதக்கொலமும் திதமாவல்வினை
மாதாமலிங்கமும் கலாமுதிர் கடுந்திரல் இலாமுரிதேசமும்
தெனக்கவர் பொழில் மாநக்கவாரமும் தொடுகடற்காவல்
கடுமுரட் கடாரமும் மாப்பொருத் தண்டாற்கொண்ட
கொப்பரகெசரிபன்மரன் உடையார் ஸ்ரீ ராஜெந்திர
சோழதேவர்க்கு யாண்டு 15 ஆவது

**பொருள்[5]**

பரகேசரிவர்மன் என்றும் அழைக்கப்பட்ட ஸ்ரீ ராஜேந்திர சோழதேவன் தமது 15-வது ஆட்சியாண்டில், தம் வலிமையான படையைத் திரட்டி அலைகடலுக்குப் பல கப்பல்களை அனுப்பினான். அங்குக் கடாரத்து மன்னன் சங்கராம விஜயோத்துங்கனைச் சிறை பிடித்துதுடன் அங்குக் கடலெனத் திரண்ட யானைகளையும் பிடித்துக் கொண்டான். நேர்மையான வழியில் அந்த அரசன் சேர்த்து வைத்திருந்த செல்வக் குவியலையும் எடுத்துக் கொண்டான்; பரந்துவிரிந்திருந்த அவனுடைய நகரமாக ஸ்ரீவிஜயாவின் “போர் வாயிலில்” நின்றிருந்த வித்தியாதரத் தோரணம் என்ற வளைவை வெற்றி முழக்கத்துடன் கைப்பற்றினான். ஜொலிக்கும் ரத்னங்கள் பதித்த சிறுவாயிலையும் பெரிய இரத்தினங்களால் ஆன வாயிலையும் சேர்த்துக் கொண்டான். தீர்த்த படித்துறைகளில் நீர் நிறைந்திருந்த பண்ணை; பாதுகாப்பு அரணாக வலிமையான மலையைப் பெற்றிருந்த மலையூர்; அகழிபோல ஆழ்கடலால் சூழப்பட்டிருந்த மயூரங்கம்; எத்தகைய போருக்கும் அஞ்சா இலங்கசோகா; ஆழ்கடலால் பாதுகாக்கப்பட்ட மாப்பாலம்; வலிமையான சுவரைப் பாதுகாப்பு

அரணாகக் கொண்டிருந்த மேவிலிம்பங்கம்; வலைப்பந்தூரு என்ற விலப்பந்தூர்; அறிவியல் புலமை வாய்ந்தவர்களால் புகழ்பெற்ற தலைத்தக்கோலம்; மூர்க்கமான, பெரிய போர்களிலும் நிலைகுலையாத மாடமாலிங்கம்; போரினால் வலிமைக் கூடிய இளமுரிதேசம்; பூந்தோட்டங்களில் தேன் தேங்கி நின்ற மானக்கவரம்; அத்துடன் ஆழ்கடலால் பாதுகாக்கப்பட்டதும் மிகவும் சக்தி வாய்ந்ததுமான கடாரம்

## வீரராஜேந்திரனின் பெரும்பூர் கல்வெட்டு

*(Found in Chengalpat, South India)*

South Indian Inscriptions, III, No. 84. (செங்கல்பட்டு மாவட்டம்) வீரராஜேந்திரன் கடாரத்தை வென்றதை இந்தக் கல்வெட்டு குறிக்கிறது. அவன் ஆட்சியேற்ற 7வது ஆண்டில் (கி.பி. 1070) அது எழுதப்பட்டது.

**வாசகம்**

[வரி]

களலத்தி பணிந்த மன்னர்க்குக் கடாரம் எறிந்து குடுத்தருளி

**பொருள்**

கடாரத்தை வென்ற வீரராஜேந்திர தேவர், தனது உதவி நாடிய அரசனிடம் அதை மீண்டும் ஒப்படைத்தான். (தனது காலடியில் விழுந்த மன்னனிடம் தானமாகக் கைப்பற்றிய தேசத்தைத் திரும்பத் தந்தான் என்பது மற்றொரு பொருள் விளக்கமாகும்)

## முதலாம் குலோத்துங்க சோழனின் சிறிய லேடன் (Smaller Leiden Copper plate) தாமிரப் பட்டயம்

*(Found in Anaimangalam, South India) Epigraphia Indica, Vol. XXII, No.35.*

கடாரத்து மன்னன் கட்டிய பௌத்த ஆலயத்துக்காக கிராமங்கள் மானியமாக வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. முதலாம் குலோத்துங்கன் ஆட்சியேற்ற 20வது ஆண்டில் (கி.பி. 1090) இந்தப் பட்டயம் எழுதப்பட்டது.

[வரிகள் 3 – 5 வரை]

கிடாரத் தரையன் கேயமாணிக்க வளநாட்டு பட்டனக் கூற்றத்து சோழகுலவல்லி பட்டனத்து எடுப்பித்த ராஜேந்திர சோழப் பொரும்பள்ளிக்கும் ராஜராஜப்

பெரும்பள்ளிக்கும் பள்ளிச்சந்தமான ஊர்கள் பழம்படியந் தராயமும் வீரசேஷையும் பன்மை பண்டை வெட்டியும் குந்தாலியும் சுங்க மோரமும் உள்ளிட்டனவெல்லாம் தவிர்ந்தமைக்கும்.

[வரிகள் 9 – 13 வரை]
முன்பு பள்ளிச்சந்தங்கள் காணியுடைய காணி ஆளைரைத் தவிர இப்பள்ளிச் சங்கத்தார்க்கே காணியாகப் பெற்றமைக்கும் தாம்ர சாசனம் பண்ணித்தர வேண்டுமென்று கிடாரத்தரையர் தூதர் ராஜவித்யாதர ஸ்ரீ சாமந்தனும் அபிமானேத்துங்க ஸ்ரீ சாமந்தனும் விண்ணப்பம் செய்ய இப்படி சந்தி விக்ரஹி ராஜவல்லபப் பல்லவரையனோடுங் கூட இருந்து தாம்ரசாசனம் பண்ணிக் குடுக்கவென்று அதிகாரிகள் ராஜேந்த்ரசிங்க மூவேந்தவேளார்க்குத் திருமுகம் பிரசாதஞ் செய்தருளி வரத் தாம்ர சாசனம் செய்தபடி.

[வரிகள் 39 – 46 வரை]
செயமாணிக்க வளநாட்டுப் பட்டனக்கூற்றத்துச் சோழகுலவல்லி பட்டனத்து ஸ்ரீ சைலேந்த்ர சூடாமணிவர்ம விஹாரமான ராஜராஜப் பெரும்பள்ளிக்குப் பள்ளிநிலையும் பள்ளி விளாகமும் உட்பட்ட எல்லை கீழ்பாற்கெல்லை கடற்கரையில் மணற்குன்றுபட மேற்கும் தென்பாற் கெல்லை புகை உணிக்கிணற்றுக்கு வடக்கும் இதன் மேற்கு திருவீரட்டானமுடைய மஹாதேவர் நிலத்துக்கு வடக்கும் இதன் மேற்குப் பரவைக்குளத்து மாராயன் கல்லுவிட்ட குளத்தில் வடகரை மேற்கு நோக்கி காரைக்காற்ப் பெருவழியுற வடக்கும் மேல்பாற்கொல்லை காரைச் காற்ப்பொருவழிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை சோழகுலவல்லி பட்டினத்து நிலம் வடகாடன்பாடி எல்லைக்குத் தெற்கும் ஆக இன் நான்கெல்லைக்கு உட்பட்ட நிலம் முப்பத்தொன்றே முக்காலே இரண்டு மா

**விளக்கம்**
[வரிகள் 1 – 13 வரை]
மன்னர் இராஜகேசரி வர்மன் என்ற ஸ்ரீ குலோத்துங்க தேவர் தமது 20வது ஆட்சியாண்டில் ஆஹவமல்ல குலகாலபுரம் அல்லது ஆயிரத்தளி என்ற தமது மாளிகையில் தமது ராணியான புவனமுழுதுடையாளுடன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அதன் பிறகு குளியல் மண்டபத்தில் உள்ள காளிங்கராஜன் என்ற இருக்கையில் சாய்ந்திருந்தபோது கடாரத்து மன்னனின் தூதர்களான ராஜவித்யாதர ஸ்ரீ சாமந்தன், அபிமனோதுங்க ஸ்ரீசாமந்தன் ஆகியோர் வந்தனர். கேயமாணிக்க வளநாட்டில் பட்டனக் கூற்றத்து சோழகுலவல்லி பட்டனத்தில் கடார மன்னன் கட்டியுள்ள ராஜேந்திரசோழ பெரும்பள்ளி, ராஜராஜ பெரும்பள்ளி ஆகியவற்றுக்கு அந்தராயம் (வரி) செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

பள்ளிகளின் பழைய காணியாளர்களை விலக்கிவிட்டு, காணி உரிமைகளை பள்ளிகளைப் பராமரிக்கும் சங்கத்தினருக்கே மாற்றித்தர வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் வைத்தனர். அதனைத் தொடர்ந்து மன்னர், அதிகாரி ராஜேந்திரசிங்க மூவேந்தவேளாருக்கு வாய்வழி உத்தரவிட, சந்திவிக்ரஹி ராஜவல்லப பல்லவரையன் அந்த உத்தரவின்படி எழுதிய தாமிரப் பட்டயம் இது.

[வரிகள் 39 – 46 வரை]
செயமாணிக்க வளநாட்டின் ஒரு பகுதியான பட்டனக் கூற்றத்திலுள்ள சோழகுலவல்லி பட்டனத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீசைலேந்திர சூடாமணிவர்ம விஹாரமான ராஜராஜப் பெரும்பள்ளிக்குச் சொந்தமான பள்ளிநிலைக்கும் பள்ளி வளாகத்திற்குமான எல்லைகள் இலை:

[வரிகள் 39 – 46 வரை]
கிழக்கு எல்லை, கடற்கரையில் உள்ள மணல் குன்றுக்கு மேற்கே உள்ளது. தெற்கு எல்லை, புகை உணிக்கிணறு, திருவீரட்டானமுடைய மஹாதேவருக்கு சொந்தமான நிலம் ஆகியவற்றுக்கு வடக்கேயும் இதன் மேற்கே பரவைக்குளத்தில் மாராயன் வெட்டியிருக்கும் குளத்தில் மேற்கு கரை வரைக்கும். மேற்கு எல்லை, காரைக்காலுக்குச் செல்லும் பெருவழியின் கிழக்கில் உள்ளது. வடக்கு எல்லை, சோழகுலவல்லிப்பட்டனத்தில் உள்ள வடக்காடன்பாடி எனும் இடத்தின் தெற்கு எல்லையில் உள்ளது. இந்த நான்கு எல்லைகளுக்கும் உட்பட நிலத்தின் அளவு, 31¾ வேலி; 2 மா; ஒரு முந்திரிகை ஆகும்.

## முதலாம் குலோத்துங்கனின் சிதம்பரம் கல்வெட்டு

*(Found in Chidambaram, South India) Epigraphia Indica, V, No. 13C, p. 106.*

காம்போஜ மன்னன் அளித்த விலை உயர்ந்த ரத்தினக் கல் பற்றி இது குறிப்பிடுகிறது. குலோத்துங்க சோழன் ஆட்சியேற்ற 44-ஆம் ஆண்டில் (கி.பி. 1114) இந்தக் கல்வெட்டு எழுதப்பட்டது.

**வாசகம்**
[வரிகள் 9 – 14 வரை]
ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு காம்போஜ ராஜன் காட்சியாகக் காட்டின கல்லு இது, உடையார் ராஜேந்திர சோழதேவர் திருவாய் மொழிந்தருளி உடையார் திருச்சிற்றம்பலம் உடையார் கோயிலில் முன் வைத்தது. இந்தக் கல்லு

திருவேதிா் அம்பலத்து திருக்கல் சாரத்தில் திருமுன்படிக்கு மேலைப்பதியிலே வைத்தது.

**பொருள்**

காம்போஜ மன்னனால் ராஜேந்திர சோழதேவருக்கு வழங்கப்பட்ட இந்தக் கல், மன்னரின் ஆணைப்படி திருச்சிற்றம்பலத்துடையார் கோயிலுக்கு முன்புறம் வைக்கப்பட்டு, அதன் பிறகு சன்னிதியின் கற்சுவரின் முன் பகுதியில் பதிக்கப்பட்டது.

## வாட் க்லொங் தோமில் கண்டெடுக்கப்பட்ட பொற்கொல்லரின் உரைகல்

*(Found in Wat Klong Thom, Thailand)*

Noboro Karashima, ed., Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceremic – shreds, Taisho University, Tokyo, 2002 (afterwards abbreviated as AMCAIO), p. 10.

தமிழ்ப் பொற்கொல்லா் ஒருவரின் பெயர் சிறிய நீண்ட சதுரமான ஒரு கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. அந்தக் கல் தாய்லாந்தின் குலொங் தோம் மாவட்டத்தில் உள்ள கும் லுக் பாட் எனும் இடத்தில் இருக்கும் ப்ரா க்ரு அதோன் கங்கரிட் அரும்பொருளகத்தில் (Phra Kru Anthon Sangarakit Museum, Khum Luk Pat, Khlong Thom District, Thailand) உள்ளது. அந்தக் கல்லின் காலக்கட்டம் கி.பி. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டு என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

**வாசகம்**

பெரும்பத்தன்கல்

**பொருள்**

பெரும் பத்தன் அல்லது தங்க வினைஞரின் உரைகல்

## தேவானிக்காவைச் சேர்ந்த சம்பசாக் கல்வெட்டு

*(Found in Champassak, Laos) AMCAIO, pp. 150 – 51.*[6]

லாவோசில் (Laos) உள்ள சம்பசாக் (Champassak) எனும் இடத்திலிருக்கும் சம்பசாக் இளவரசரின் குடியிருப்பு வளாகத்தில் உள்ள கல்தூணில் இந்தக் கல்வெட்டுக் காணப்படுகிறது.

**விளக்கம்**

சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருக்கும் இந்த நீளமான கல்வெட்டு, தேவானிக்கா என்ற இளவரசனை வானுயுரப் பாராட்டுகிறது. அவனைப் பல புராண கால வீரர்களுடன் அது ஒப்பிடுகிறது. நீதியை நிலை நாட்டுவதில் அவன் கனக பாண்டியன் (கனக பாண்டிய அவ நியாய ரசஷனே) என்கிறது அந்தக் கல்வெட்டு. கனக பாண்டியன் என்றதும் பொற்கைப் பாண்டியன் (பொன்னால் ஆன கையுடையவன்) நினைவுக்கு வரும். சிலப்பதிகாரத்தில் (கி. பி. 5-ஆம் நூற்றாண்டு) வரும் பாண்டிய மன்னனான பொற்கைப் பாண்டியன், நீதியை நிலைநாட்ட தனது கையையே வெட்டிக் கொண்டவன்.

## தாக்குவா பா தமிழ்க் கல்வெட்டு[7]

*(Found in Takua Pa, Southern Thailand) A<CAIO, p. 11.*

தென் தாய்லாந்தில் உள்ள தாக்குவா பா நதிக்கரையில் உள்ள ஒரு குன்றில் அந்தக் கல்வெட்டுக் கண்டெடுக்கப்பட்டது. அதனுடன் மகாவிஷ்ணுவின் கருங்கல் விக்கிரகம் ஒன்றும் பல்லவர் பாணியிலான வேறு சில சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. அவை தற்போது தென் தாய்லாந்தில் உள்ள நாகோன் ஸ்ரீ தமாராட் அரும்பொருளகத்தில் (Nakhon Si Thammarat Museum) வைக்கப்பட்டுள்ளன. அவை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

**வாசகம்**

1…யரவர்மக்கு
2…மான் தான் நங்[குருடைய]
3[ன்]தொட்ட குளம் பேர் ஸ்ரீ அ[வநி]
4நாரணம் மணிக்கிராமத்தார்க்
5கும் சேனாமுகத்தார்கும்
6…அபதார்க்கும் அடைக்கலம்

**விளக்கம்**

[…..? வர்மன் ஆட்சிக்காலத்தில்] நங்குரடையான் என்பவன், ஸ்ரீ அவநி நாரணம் என்ற இந்தக் குளத்தை வெட்டினான். இது மணிக்கிராமம், சேனாமுகம்[8] மற்றும் அபதாரின் பாதுகாப்பில் விடப்படுகிறது.

## வணிகச் சங்கம் பற்றிய பாருஸ் கட்வெட்டு

*(Found in Lubo Tua, Sumatra, Indonesia) AMCAIO, pp. 19 – 26.*[9]

இந்தக் கல்வெட்டு சுமத்ராவில் பாருஸுக்கு (Barus) அருகிலிருக்கும் லுபொ துவா (Lubo Tua) எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சக 1010 ஆண்டு, ஆங்கில கி.பி. 1088 உடன் ஒத்துப்போகிறது. அது தமிழ்நாட்டில் முதலாம் குலோத்துங்கன் ஆட்சி நடந்த காலம். தற்போது இந்தக் கல்வெட்டு ஜக்கர்த்தாவில் உள்ள தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டுப் பற்றி E. Hultzch முதலில் தமது அறிக்கையில் (Madras Epigraphy report 1891 – 92, p.11) குறிப்பிட்டிருந்தார். அதன் பிறகு K.A. நீலகண்ட சாஸ்திரி, "A Tamil Merchant-Guild in Sumatra", TBJ, LXXII, 2(1932), pp. 314 – 27 எனும் தனது புத்தகத்தில் விரிவாக ஆராய்ந்திருந்தார்.

**வாசகம்**

1ஸ்வஸ்தி ஸ்ரீ சகரை
2ஆண்டு ஆயிரத்து[ப்ப]
3த்துச் செல்லாநி[ன்]
4ற மாசித் திங்கள்
5வாரோசாந மாதங்
6கரி வல்லவத் தேவிஉ
7ய்யக் கொண்ட பட்
8டி நத்து வேளாபுரத்து
9கூடி நிரந்த தே[சித் திசை]
10விளங்கு திசை ஆயி
11த்தைஞ்ஞூற்றுவரோ
12ம் நம்மகநார் நகர ஸேநாப
13தி நாட்டுசெட்டி
14யார்க்கும் பதிநெண்பூமி
15தேசி அப்பார்க்கு மா[வெ]த்
16துகளுக்கும் நா வைத்துக்
17குடுத்த பரிசாவது மரக்க
18ல… … …
19ல மரக்கல நாயநுங் கேவி
20களும் கஸ்தூ[ரி] விலை மு[தல]கப்ப[ட]
21அஞ்சு துண்[டா]யம் பொன்னும் கு[டு]
22த்துப் பாவாடை ஏறக்கடவதாகவும்

23இப்படிக்கு[இ]க்கல் எழுதி நாட்டி
24க் குடந்தோம் பதிநெண்புமி தேசித் திசை விள
25ங்கு திசை ஆயிரத்தைந்த்நூற்றுவரோம் அ
26றமற வெற்க அறமேய் துணை.

**விளக்கம்**[10]

நிகழும் சக வருடம் ஆயிரத்துப் பத்து மாசி மாதம்..,
நாங்கள் ஆயிரம் திசை ஐந்நூற்றுவர் மாதங்கிர் வல்லவ தேசி உய்யக் கொண்ட பட்டினம் (வணிகர்களுக்கு மாதங்கிரி எனும் துர்க்கை அருள்பாலிக்கும் பட்டினம்) எனப்படும் வாரோச்சிலுள்ள வேளாபுரத்தில் எங்கள் பிள்ளைகளான நகர சேனாபதி நாட்டுச் செட்டியார், பதிநெண்பூமி தேசி அப்பர் மற்றும் மாவெட்டுகள் (யானைப் பாகர்கள்?) சந்தித்தோம்.

அப்போது(ஒவ்வொரு) கப்பலுடைய தலைவனும், கேவிகளும், கஸ்தூரியின் விலையின் அடிப்படையில் அஞ்சு துண்டையம் தங்கம் செலுத்திவிட்ட பிறகுதான், கரையில் இறங்கவேண்டும் என்று முடிவு செய்தோம். அதன்படி பதினெட்டுப் பூமியின் அனைத்துத் திசைகளிலும் அறியப்பட்ட திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரான நாங்கள் அதைக் கல்வெட்டில் எழுதுகிறோம். அறத்தை மறவாதீர்கள். அறமே துணை வரும்.

## சேர நாட்டு வணிகரைப் பற்றிய பேகான் கல்வெட்டு

*(Found in Pagan, Myanmar) AMCAIO, p, 15*

கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டு பர்மாவில் (தற்போது மியன்மார்) உள்ள பேகான் (Pagan) நகரிலுள்ள ஒரு விஷ்ணு கோயிலில் கண்டெடுக்கப்பட்டது. தற்போது பேகானில் உள்ள தேசிய அரும்பொருளகத்தில் அது வைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷ்ணு ஆலயம், நானானதேசி வின்னகர் என்று அழைக்கப்பட்டது. ஆயவோலே ஐந்நூ ற்றுவர் என்றும் வழங்கப்பட்ட நானாதேசி வின்னகர் என்று அழைக்கப்பட்டது. ஆயவோலே ஐந்நூற்றுவர் என்றும் வழங்கப்பட்ட நானாதேசி என்ற புகழ்பெற்ற தென்னிந்திய வணிகச் சங்கத்தின் பெயரில் கோயில் இருந்தது என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. கல்வெட்டை எழுதிய வணிகர் மகோதயப் பட்டினத்தைச் சேர்ந்தவர் என்று (அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது கேரளக் கரையில் தற்போது இருக்கும் சேரர்களின் முன்னாள் தலைநகரமாகும். அது தற்போது கொடுங்களூர் என்று அழைக்கப்படுகிறது.

**வாசகம்**

சுவஸ்திஸ்ரீ திருச்செல்வம் பெருக. புக்கம் ஆன அரிவர்த்தனப் புரத்து நானாதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமும் செய்து திருக்கதவுமிட்டு இந்த மண்டபத்துக்கு நின்றெரிக்கைக்கு நிலை விளக்குமொன்றுமிட்டேன் மலைமண்டலன்னு மகோதையர் பட்டினத்து இராயிரண் சிறியானான ஸ்ரீ குரசேகர நம்பியேன் இது ஸ்ரீ இடண்மம் மலைமண்டலத்தான்

**விளக்கம்**

மங்களம் உண்டாகட்டும். மலை மண்டலம் மகோதையர் பட்டினத்தைச் சேர்ந்த இராயிரன் சிறியன் என்ற குலசேகர நம்பியாகிய நான், புக்கம் என்ற அரிவர்த்தனபுரத்தில் உள்ள நானாதேசி வின்னகர் கோயிலின் மண்டபத்தைக் கட்டினேன். கோயிலுக்கு முன்கதவு அமைத்ததுடன் அணையா விளக்கு ஒன்றையும் தானமாக வழங்கினேன். இந்த அறப்பணி “மலைமண்டலத்தான்” என்று வழங்கப்பட வேண்டும். இந்தத் தமிழ் வாசகங்களுக்கு முன்னோடியாக முகந்தாலை எனும் நூலில் உள்ள மகா விஷ்ணுவின் புகழ்பாடும் சமஸ்கிருத சுலோகம் இடம்பெற்றுள்ளது.

## குவாங்சூ தமிழ்க் கல்வெட்டு

*(Found in Quanzhou, China) AMCAIO, p. 16.*

சக ஆண்டு 1203-இல் எழுதப்பட்டது (கி.பி. 1281) இந்தக் கல்வெட்டு. தென் சீனாவில் உள்ள புகழ்பெற்ற மத்தியகாலத் துறைமுகமான குவாங்சூவில் உள்ள தனியார் வீட்டில் 1956-ஆம் ஆண்டில் இது கண்டெடுக்கப்பட்டது. ஒரே கல்லில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. (தற்போது கல் இரண்டாக உடைந்துவிட்டது). தமிழ் வாசகங்களுக்குப் பிறகு சில சீன மொழி வாசகங்கள் காணப்படுகின்றன. ஆனல் அந்த வாசகங்கள் தற்போதிருக்கும் கல்வெட்டுடன் தொடர்புடையதாக இல்லை. சிவனைத் (ஹரன்) துதிக்கும் சமஸ்கிருத வாசகத்துடன் கல்வெட்டு வாசகம் தொடங்குகிறது. அதிலிருக்கும் வாசகம் முழுவதும் குவாங்சூவில் இருந்த சிவன் கோயிலைப் பற்றியது. அந்தப் பழைய துறைமுக நகரின் தென்கிழக்குப் பகுதியில் கட்டப்பட்டிருந்த இரண்டு தென்னிந்திய பாணி இந்துக் கோயில்களில் ஒன்றாக அது இருந்திருக்க வேண்டும். அந்த வட்டாரத்தில்தான் வெளிநாட்டு வணிகர்கள் அதிகாரபூர்வமாகக் குடியமர்த்தப்பட்டிருந்தனர். கோயிலைக் கட்டிய சம்பந்தப் பெருமாள், திருச்சக்கரவர்த்திகள் என்ற பட்டப் பெயரைக் கொண்டிருந்தார். அதனால் அவர் அங்குச் சைவ சமயத் தலைவராக இருந்திருப்பார் என்று தோன்றுகிறது. அடுத்த வாசகம் மங்கோலிய மன்னர் செக்கச்சை கான் பற்றிக் குறிப்பிடுகிறது(அனேகமாக குப்லாய் கான் - Kublai Khan). அவரது

பெயரிலேயே கோயில் திருக்கானீஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. அந்தக் கல்வெட்டை முதலில் ஆராய்ந்த சுப்ரமணியன் (T.N. Subramanian), அதன் முக்கியத்துவத்தை "A Tamil Colony in Medieval China", South Indian Studies, I, edited by R. Nagaswamy (Madras, 1978), pp. 1- 52" என்ற தமது கட்டுரையில் விளக்கமாக ஆராய்ந்துள்ளார். அவர் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள திருக்கடலீஸ்வரம் என்ற கோயிலின் பெயர் தவறானது. அந்த நேரத்தில் அவருக்குக் கிடைத்த கல்வெட்டின் தெளிவற்ற புகைப்படம் அந்தத் தவறுக்குக் காரணம்.[11]

**வாசகம்**

ஹரா ஸ்வஜ்தி ஸ்ரீ சகாப்தம் 1203வது சித்திரை
சித்திரை நாள் ஸ்ரீ செக்கச்சேகான் திருமேனிக்கு நன்றாக
உடையார் திருக்கானீஸ்வரமுடைய நாயனாரை
எற்றியருளப் பன்னினார் சம்பந்தப் பெருமாள்
ஆன தவச்சக்ரவயர்திகள் செக்கச்சேகான் பர்மாண்
புடி

**விளக்கம்**

ஹரனே (சிவனே), மங்களம் உண்டாகட்டும், சக ஆண்டு 1203 சித்திரை மாதம் சித்திரை நட்சத்திர நன்னாளில், திருச்சக்கரவர்த்திகள் சம்பந்தப் பெருமாள், சேக்கச்சேகான் அனுமதியுடன் உடையார் திருக்கானீஸ்வரம் உதய நாயனாரை (சிவன்) மன்னர் செக்கச்சே கானின் நலன் கருதி எழுந்தருளச் செய்தார்.

## நீசூ ஆச்சே தமிழ்க் கல்வெட்டு[12]

*(Found in Neusu Aceh,Sumatra, Indonesia)*

இந்தக் கல்வெட்டு வடக்கு சுமத்ராவில் உள்ள தற்போதைய பண்டா ஆச்சேயின் (Banda Aceh) புறநகர் பகுதியான நீசூ ஆச்சேயில் இருக்கும் ஒரு பள்ளிவாசலில் உள்ள உயரமான கல்லின் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு தற்போது நங்ரோ ஆச்சேயில் உள்ள மாவட்ட அரும்பொருளகத்தில் (Provincial Museum of Nanggroe Aceh, Indonesia) வைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் ஒரு பக்கம் முற்றாகப் படிக்க முடியாத அளவிற்கு தேய்ந்துபோய் உள்ளது. இரண்டாவது பக்கமும் தேய்ந்துபோன நிலையில் உள்ளபோதிலும் அதன் சில வரிகளை ஓரளவு படிக்க முடிகிறது. அப்பக்கத்தின் இரண்டாவது பாதியில் இருக்கும் வாசகங்கள் தரப்படுகின்றன. இந்தக் கல்வெட்டு

கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பொருள் கண்டறிந்தவர் Y. சுப்பராயுலு.

**வாசகம்**

01… …
02வும் போவா...
03கவும் போக்கிவு
04ள்ளது கைக்
05கொள்ளக் கட
06வதல்லதாக
07வும் இதுக்கு
08உரய்வ[ருந்த]
09ங்கல்லை[வா]
10கல் கம்மயலா
11ர் உள்ளிட செ
12வித்துண்பவர்
13கள் வந்து கொ
14டு போக கடவா
15களவாகவும் பொ
16லிசை கொள்ளக்
17கடவர்களல்
18லவாகவும் பிற
19கும் நம்மக்க
20ள் இக்கல்வெ
21ட்டுக்கு கொக்
22கச் செய்யக்
23கடவர்கள்
24ஸு மபஸ்து

**பொருள்**

[வரிகள் 2 – 7]

…எஞ்சியது வசூலிக்கப்படாது;

[வரிகள் 7 – 15]

வாகல் கம்மயலார் உட்பட இதன் மூலம் பயனடைவோர் அனைவரும் தங்கள் உரைகல்லை இங்கு கொண்டு வரவேண்டும்.

[வரிகள் 15 – 18]
வரிகள் வசூலிக்கப்படாது;

[வரிகள் 18 – 24]
இதற்குப் பிறகு "நம் மக்கள்" இந்தக் கல்வெட்டில் உள்ளபடி தங்கள் பணியைச் செய்ய வேண்டும். மங்களம் உண்டாகட்டும்.

**விளக்கம்**

முதல் பக்கம் முற்றிலும் படிக்க முடியாத விதத்தில் உள்ளது. அதனால் இந்தப் பதிவின் முழு நோக்கம் தெரியவில்லை. இரண்டாம் பக்கத்தின் படிக்க முடிந்த பகுதியில், சில நடைமுறைகள் குறிப்பிடப்படுகின்றன. ஏதோ "வசூலிக்கப்படாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வரிகள் 7 முதல் 13 வரை, தங்கத்தைப் புடம்போடுபவர்கள் பற்றியும் அவர்களின் உரைகல் (உரய்வ[ருந் த]ங்கல்) பற்றியும் கூறுகின்றன. வரிகள் 9 முதல் 10 வரை, இடம்பெறும் [வா] கல் கம்மயலார் என்ற பதம் உள்ளூரில் பயன்படுத்தப்பட்ட சொல்வழக்காக இருக்கலாம். அது தமிழாகத் தெரியவில்லை. ஆதலால் இதை உரைகற்களுக்குப் பொறுப்பேற்றிருந்த யாரோ ஓர் அதிகாரி அல்லது அரசவைப் பொற்கொல்லர் இட்ட கட்டளையாகக் கருதலாம்.

வரிகள் 19 – 20ல் "நம் மக்கள்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருப்பதால் அது பாருஸ் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைபோல தென்னிந்திய வணிகச் சங்கமான ஐந்நூற்றுவரைக் (ஆயஹோலே 500 அல்லது நானாதேசி) குறிக்கிறது எனலாம். அந்தப் பதம் வணிகச் சங்கத்தின் முகவர்கள் அல்லது அதிகாரிகளுக்குப் பயன்படுத்தப்படும் வழக்கமான ஒன்றாகும்.

## Notes

1. K.A. Nilakanta Sastri, *The Cōlas*, Madras, 1955, p. 211; Majumdar, R.C., "The Overseas Expeditions of King Rajendra Chola", *Artibus Asiae* XXIV, 1961; K.G. Krishnan, "Chola Rajendra's Expedition to South-East Asia", in K.G. Krishnan, *Studies in South Indian History and Epigraphy*, Madras. 1981. For the date of the expedition, Sastri suggests 1026 (Rajendra's fourteenth regnal year) and Krishnan 1025 (thirteenth regnal year), but the reading of the regnal year of the inscription (*Epigraphia Carnatica*, vol. IX, Cp 84) on which Krishnan depends is doubtful, and in another inscription (*SII*, viii, 683), which is also referred to by Krishnan, there is no mention of the Kadaram expedition. However, Majumdar's suggestion of 1018 comes from his taking of the Sanskrit part of the Tiruvalangadu copper-plate inscription, dated in the sixth year of Rajendra I, as coeval with the Tamil part. But the Sanskrit *prasasti* of

this copper-plate inscription must be a later addition, as in the case of other copper-plate inscriptions and, therefore, cannot be dated in 1018, for which see the Krishnan's paper mentioned above.

2. Mēṉṟōṉṟipattinam the place of the agent, was most probably the port town of Periyapattinam, near Ramesvaram Island.
3. A variant reading is "kadārattarayaṉ".
4. A variant reading is "ilaṅkācōpam"
5. The translation is a slightly modified version of the one given in Nilakanta Sastri, *The Cōlas*, 2nd ed., 1955, pp. 211–12. The attributes "mā" (meaning great or big) to the place names are left untranslated by him, following the pioneer Epigraphist Hultzsch in *South Indian Inscriptions*, Vol. II, No. 20, pp. 104–09.
6. The inscription was first edited by G. Coedès in "Nouvelles données sur les origins du royaume Khmer: La stele de Vat Luong Kau pres de Vat Ph'u", *BEFEO*, XLVIII, 1956, pp. 209–20. The text and translation published in *AMCIAO* was made by K.V. Ramesh.
7. Edited and discussed by K. A. Nilakanta Sastri, "The Takua-pa (Siam) Tamil Inscription", *Journal of Oriental Research,* VI, 1932, pp. 299–310; Idem., "Takuapa and Its Tamil Inscription", *JMBRAS*, XXII, 1949, pp. 25–30.
8. The earlier treatment of Sēnāmukam as a military body is not correct. The context of its occurrence in a few ninth century Tamil inscriptions along with Maṉigrāmam and its association with several mercantile bodies in a few early Javanese inscriptions (H.B. Sarkar, *Corpus of the Inscriptions of Java,* Vol. I, p. 53; Vol. II, p. 276) would suggest that it was also a body of traders.
9. The text was first published in Subbarayalu, Y., "The Merchant-Guild Inscription at Barus, Sumatra, Indonesia — a Rediscovery", in Claude Guillot, ed., *Histoire de Barus: Le Site de Lobu Tua I: Etudes et Documents* (Cahiers d'Archipel 30) (Paris, 1998), pp. 25–33.
10. This is a slightly modified version of Subbarayalu's original translation in light of the suggestions made by Jan Wissemann Christie in "The Medieval Tamil-language Inscriptions in Southeast Asia and China", *Journal of Southeast Asian Studies* 29 (1998), pp. 239–68.
11. The importance of this inscription is discussed also by N. Karashima in his paper, "Trade Relations Between South India and China During the 13th and 14th Centuries", *Journal of East–West Maritime Relations*, Vol. 1, 1989, pp. 59–81.
12. The text of this inscription was made by Subbarayalu using some photographs of the inscriptions provided by Dr Claude Guillot of Ecole de Hautes Etudes en Sciences Sociales, Paris, and some recent photos exhibited in the Kaala Chakra exhibition in Singapore, 2007. A partially deciphered text of this inscription is used by Jan Wissemann Christie in "The Medieval Tamil-language Inscriptions in Southeast Asia and China", *Journal of Southeast Asian Studies* 29 (1998), pp. 239–68.